ராகுல் காந்திக்கு எதிரான குற்றப்பத்திரிக்கை தாக்கல் என்பது

மக்களுடைய நியாயத்தை கேட்பவர்கள் மீது அடக்குமுறை

புதுவை காங். தலைவர் வைத்திலிங்கம் எம்.பி குற்றச்சாட்டு

■ புதுச்சேரி

நேஷனல் ஹெரால்டு வழக்கில் சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்திக்கு எதிராக அமலாக்கத் துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருக்கும் நிலையில், மத்திய அரசு மற்றும் அமலாக்கத் துறைக்கு எதிராக காங்கிரஸ் கட்சி நாடு முழுவதும் போராட்டம் நடத்தி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக புதுச்சேரி மாநில காங்கிரஸ் கட்சி சார்பில் நேற்று மாலை கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெற்றது. மாநிலத் தலைவர் வைத்திலிங்கம் எம்.பி தலைமை தாங்கினார். முன்னாள் முதல்வர் நாராயணசாமி, வைத்தியநாதன் எம்எல்ஏ, முன்னாள் அமைச்சர்கள் கந்தசாமி, ஷாஜகான் மற்றும் காங்கிரஸ் கட்சினர் பலர் கலந்து கொண்டு மத்திய அரசுக்கும், அமலாக்கத்துறைக்கும் எதிராக கண்டன முழக்கங்கள் எழுப்பினர். அப்போது வைத்திலிங்கம் எம்.பி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அரிசி, உளுந்து, எண்ணை, பெட்ரோல், காஸ் சிலிண்டர் விலை உயர்ந்துள்ளது. மத்திய அரசு வேண்டும் என்றே விலைவாசியை உயர்த்தி மக்கள் மீது சுமையை கொண்டு வந்திருக்கிறது.

● மத்திய பாஜக அரசை கண்டித்து புதுச்சேரி சுதேசி பஞ்சாலை முன்பு நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் எம்.பி.,முன்னாள் முதல்வர் நாராயணசாமி உள்ளிடோர் பங்கேற்றனர். படம்: எம்.சாம்ராஜ்

பெரிய நிறுவனங்களுக்கு லாபம் தர வேண்டும் என்பதற்காகத்தான் இதனை செய்கின்றனர். இதனை தட்டிக்கேட்கக் கூடிய அளவில் ராகுல்காந்தி இருக்கிறார். இந்நிலையில் சோனியா, ராகுல் காந்திக்கு எதிரான குற்றப்பத்திரிக்கை தாக்கல் என்பது மக்களுடைய நியாயத்தை கேட்பவர்கள் மீது அடக்குமுறையை கொண்டு வருவதை காட்டுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் முதல்வர் நாராயணசாமி பேசியதாவது:

சோனியா காந்தி, ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கே ஆகியோர் காங்கிரஸ் கட்சியை தூக்கி நிறுத்தியிருக்கிறார்கள். உயிரோட்டமாக வைத்திருக்கிறார்கள். அதை முறியடிக்க வேண்டும் என மோடி நினைக்கிறார். இதெல்லாம் எடுபடாது.

ராகுல் காந்தி மீது திட்டமிட்டு பழிவாங்கும் நோக்கத்தோடு வழக்கு போடப்படுகிறது. ஆளும் மாநிலங்களில் எந்த ஊழல் குற்றச்சாட்டு இருந்தாலும் மோடி அரசு கண்ணை மூடிக்கொள்கிறது. ஆனால் எதிர்க்கட்சிகள் ஆளுகின்ற மாநிலங்களில் திட்டமிட்டு, பொய் வழக்கு போடுவது, சிறைக்கு அனுப்புவது போன்ற வேலையை செய்கின்றது. தமிழகம் உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் ஆளும் மாநிலங்களுக்கு தொல்லை கொடுத்து வருகின்றனர். சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோர் பொய் வழக்கில் இருந்து கண்டிப்பாக வெளியே வருவார்கள். அவர்களுக்கு காங்கிரஸ் கட்சி துணை நிற்கும்.

புதுச்சேரியில் ஆளும் என்.ஆர்.காங்கிரஸ்-பாஜக ஆட்சியில் தினந்தோறும் ஊழல். முதல்வர், அமைச்சர்கள், அதிகாரிகள் ஊழல் செய்கின்றனர். நேஷனல் ஹெரால்டு வழக்கில் அக்கறை கொண்டுள்ள பிரதமர் மோடி, ஏன் முதல்வர் ரங்கசாமி, அமைச்சர்கள் நமச்சிவாயம், லட்சுமிநாராயணன் மீது வழக்கு போடவில்லை. இந்த பாரபட்சம் ஏன்? இவ்வாறு அவர் பேசினார்.

தொகுதி மக்களிடம் நெருக்கத்தை ஏற்படுத்தும் வகையில்

திருக்கனூரில் வீடு கட்டி குடியேறிய அமைச்சர் நமச்சிவாயம்

■ புதுச்சேரி

தேர்தலையொட்டி மக்களை சந்திக்க புதிய வீட்டில் அமைச்சர் நமச்சிவாயம் நேற்று குடியேறினார்.

புதுச்சேரி வில்லியனூர் தொகுதியில் போட்டியிட்டு வந்த அமைச்சர் நமச்சிவாயம், கடந்த 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜகவில் இணைந்ததால், தொகுதி மாறி மண்ணாடிப்பட்டு தொகுதியில், என்.ஆர்.காங்கிஸ்-பாஜக கூட்டணி சார்பில் போட்டியிட்டார். இவர் முதல்வர் ரங்கசாமியின் அண்ணன் மகளை திருமணம் செய்துள்ளார். இதனால் முதல்வருக்கு மருமகன் ஆவார்.

கடந்த முறை தேர்தலையொட்டி, திருக்கனூர் பகுதியில் குடியேறிய அமைச்சர், தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு, திருக்கனூரில் இருந்து கொடாத்தூர் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் குடியேறி மக்கள் பணிகளை மேற்கொண்டு வந்தார். சில மாதங்கள் கழிந்து, வில்லியனூர் மணவெளியில் உள்ள தனது வீட்டுக்கு திரும்பினார்.

● திருக்கனூரில் வீடு கட்டி குடியேறிய அமைச்சர் நமச்சிவாயம்.

மண்ணாடிப்பட்டு தொகுதியில் அரசின் நலத்திட்ட பணிகள் தொடக்கம், கட்சிப் பணிகள் என அவ்வப்போது வில்லியனூரில் இருந்து தொகுதிக்கு வந்து செல்கிறார். இதனால், தொகுதி மக்கள் அமைச்சரை நேரில் சந்தித்து குறைகளை தெரிவித்து, நிவர்த்தி செய்து கொள்ள முடியாத நிலை இருந்ததாக தெரிவித்தனர்.

சட்டப்பேரவைத் தேர்தல் அடுத்த ஆண்டு நடக்க உள்ளது. இதனை முன்னிட்டு தொகுதி மக்களிடம் நெருக்கத்தை ஏற்படுத்தும் வகையில், மண்ணாடிப்பட்டு தொகுதியில் குடியேறி மக்கள் பணிகளை மேற்கொள்ள அமைச்சர் முடிவு செய்தார்.

அதற்காக, மண்ணாடிப்பட்டு தொகுதி திருக்கனூரில் புதிதாக கட்டப்பட்டுள்ள வீட்டுக்கு தனது குடும்பத்துடன் அமைச்சர் நமச்சிவாயம் நேற்று குடியேறினார். தேர்தல் வரவுள்ளதால் தொகுதி மக்களை சந்திக்க வீடு மாறியுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

கிருமாம்பாக்கத்தில் விநாயகா மிஷன்ஸ் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை

முதல்வர் ரங்கசாமி திறந்து வைத்தார்

■ புதுச்சேரி

புதுச்சேரி கிருமாம்பாக்கத்தில் விநாயகா மிஷன்ஸ் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

விநாயகா மிஷன்ஸ் ரிசர்ச் பவுண்டேஷன் வேந்தர் கணேசன் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி கலந்து கொண்டு இதனை திறந்து வைத்தார். விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் செல்வம், எம்எல்ஏக்கள் லட்சுமிகாந்தன், செந்தில்குமார், விநாயகா மிஷன்ஸ் துணைத் தலைவர் அனுராதா கணேசன், முதன்மை வியூக அதிகாரி சுரேஷ் சாமுவேல், மருத்துவ இயக்குநர் ஹரி மேனன், டீன்(நிர்வாகம்) ராஜன் மற்றும் மருத்துவ வல்லுனர்கள், கல்வியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

➤ கிருமாம்பாக்கத்தில் விநாயகா மிஷன்ஸ் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை செயல்பாட்டை குத்து விளக்கை ஏற்றி முதல்வர் ரங்கசாமி, தொடங்கி வைத்தார். உடன் விநாயகா மிஷன்ஸ் வேந்தர் கணேசன், விநாயகா மிஷன்ஸ் துணைத் தலைவர் அனுராதா கணேசன் உள்ளிட்டோர். படம்: எம்.சாம்ராஜ்

விழாவில் முதல்வர் ரங்கசாமி பேசியதாவது:

விநாயகா மிஷன்ஸ் மருத்துவக் கல்லூரியில் உள்ள நர்சிங் கல்லூரியும் சிறப்பாக செயல்படுகிறது. 'உங்கள் ஆரோக்கியம் எங்களுடைய நோக்கம்' என்ற நோக்கத்துடன் இந்த மருத்துவக் கல்லூரியை நடத்தி வருகின்றனர். தற்போது சிறப்பு மருத்துவ வசதி அளிக்கும் வகையில் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை தொடங்கி இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இது புதுச்சேரி மட்டுமின்றி தமிழக மக்களுக்கும் உதவியாக இருக்கும். இதற்கு தேவையான உதவிகளை அரசு செய்து கொடுக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார். விநாயகா மிஷன்ஸ் பல்கலைக்கழக வேந்தர் கணேசன் பேசியதாவது:

சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் பல சிறப்பு வசதிகளை ஏற்படுத்தியுள்ளோம். புதுச்சேரி இன்னும் 10 வருடங்களில் மருத்துவ சுற்றுலா மையமாக மாறும். தகுதியான நல்ல சூழல், கட்டமைப்பு, போதிய வசதிகள் அமைந்தால் புதுச்சேரி பெரிய மருத்துவ மாநகரமாக உருவாகும். இதுபோன்ற வாய்ப்புகள் உருவாக விநாயகா மிஷன்ஸ் பல்கலைக்கழகமும் உதவியாக இருக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

சிதம்பரம் அருகே

மதுபோதையில் ஏற்பட்ட தகராறில் இளைஞர் வெட்டிக்கொலை

■ கடலூர்

சிதம்பரம் அருகே மதுபோதையில் ஏற்பட்ட தகராறில் இளைஞர் வெட்டிக்கொலை செய்யப்பட்டார்.

சிதம்பரம் அருகே வேலக்குடி பகுதியைச் சேர்ந்தவர், கூலித் தொழிலாளி பாலகணபதி (28). இவரது நண்பர் வினோத் குமார் (25). புவனகிரி பூதவராயன் பேட்டை கிராமத்தைச் சேர்ந்த இவர், தற்போது குடும்பத்துடன் மேலமூங்கிலடி கிராமத்தில் வசித்து வருகிறார்.

வினோத் குமார், தனது நண்பர் பாலகணபதியை அவரது வீட்டுக்கு அடிக்கடி அழைத்துச் சென்று வந்தார். வினோத் குமார் வீட்டில் இல்லாத நேரத்தில் அவரது அவரது வீட்டுக்கு சென்ற பாலகணபதி, வினோத்குமாரின் மனைவியை கிண்டல் செய்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் நேற்று இரவு வினோத் குமார், அவரது நண்பர்கள் ஸ்ரீராம் உட்பட சிலருடன் பாலகணபதியும் மது குடிப்பதற்காக அதே பகுதியில் உள்ள வெள்ளாற்று கரைக்கு சென்றனர். மதுபோதையில் ஏற்பட்ட தகராறில் வினோத்குமார் மற்றும் அவரது நண்பர்கள் போதையில் இருந்த பாலகணபதியை கத்தியால் வெட்டி கொலை செய்துவிட்டு தப்பி ஓடி உள்ளனர்.

பாலகணபதி, வினோத்குமாரின் மனைவியை கிண்டல் செய்ததாக கூறப்படுகிறது. மதுபோதையில் பாலகணபதியை கத்தியால் வெட்டி கொலை செய்துவிட்டு தப்பி ஓடினர்.

இதுகுறித்து தகவல் அறிந்த சிதம்பரம் தாலுகா போலீஸார் சம்பவ இடத்துக்கு சென்று பாலகணபதியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக சிதம்பரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் மற்றும் மற்றும் சிதம்பரம் டிஎஸ்பி லாமேக் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு விசாரணை நடத்தினர்.

இது தொடர்பாக போலீஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

என்எல்சி இந்தியா நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்க தேர்தலுக்காக வேட்பு மனு தாக்கல்

■ கடலூர்

நெய்வேலி என்எல்சி இந்தியா பொதுத்துறை நிறு வனத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களுக்கான தேர்தல் வரும் 25-ம் தேதி நடைபெறுகிறது.

இத்தேர்தலுக்கு நேற்று வேட்புமனுத் தாக்கல் தொடங்கியது.

தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தினர் பேரவை இணை பொதுச் செயலாளர் பாரி தலைமையிலும் அதன் ஆதரவு சங்கங்களின் நிர்வாகிகளுடன் நேற்று தேர்தல் அதிகாரியான மத்திய துணை தலைமை தொழிலாளர் ஆணையர் சவுத்தியிடம் மனு தாக்கல் செய்தனர்.

அண்ணா தொழிற்சங்க தொழிலாளர் ஊழியர் சங்கத் தினர் மாநில அண்ணா தொழிற் சங்க பேரவை செயலாளர் கமலக்கண்ணன் மற்றும் கடலூர் தெற்கு மாவட்ட அதிமுக செயலாளர் சொரத்தூர் ராஜேந்திரன் ஆகியோர் தலைமையில் மனுத்தாக்கல் செய்தனர்.

பாரதிய மஸ்தூர் சங்கத்தினர் மாநில அமைப்பு செயலாளர் தங்கராஜ் மற்றும் நிர்வாகிகள் அதன் தலைவர் வீரவன்னிய ராஜா தலைமையில் வந்து, மனுத்தாக்கல் செய்தனர்.

இதேபோலபாட்டாளி தொழிற்சங்கத்தினர், திராவிட தொழிலாளர் ஊழியர் சங்கங்கத்தினர் மற்றும் சிஐடியு தொழிற்சங்கத்தினரும் நேற்று மனுத்தாக்கல் செய்தனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்கொள்ள நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

25 ஆண்டுகால கல்விச் சிறப்பை கொண்டாடும் வகையில்

அமிர்தா வித்யாலயா சார்பாக 27 உலக சாதனை

■ சென்னை

கோவை மாவட்டம் நல்லம்பாளையத்தில் உள்ள அமிர்தா வித்யாலயம், மாதா அமிர்தானந்தமயி மடத்தின் பெருமைமிக்க பிரிவாகும். இங்கு 25 ஆண்டு கால கல்விச் சிறப்பை கொண்டாடும் வகையில் அமிர்தா வித்யாலயம் உலக சாதனை விழா 2025 நடத்தப்பட்டது. அப்போது 27 உலக சாதனைகள் படைக்கப்பட்டன. 3 நாடுகள், இந்தியாவின் 7 வெவ்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 27 நடுவர்களின் மேற்பார்வையின் கீழ் இந்த சாதனைகள் எலைட் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ், ஆசிய ரெக்கார்ட்ஸ் அகாடமி, இந்தியா ரெக்கார்ட்ஸ் அகாடமி மற்றும் தமிழன் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் ஆகியவற்றால் சான்றளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வு ஏப். 3 முதல் 8-ம் தேதி வரை நடைபெற்றது. இந்த நிகழ்வின் சான்றிதழ், விருது வழங்கும் விழா ஏப்.11-ம் தேதி நடைபெற்றது. ப்ரீ-கேஜி முதல் 12-ம் வகுப்பு வரை மொத்தம் 3,091 மாணவ, மாணவிகள், 154 கல்வியாளர்கள், 150 துணை ஊழியர்கள் இணைந்து இதை சாத்தியமாக்கினர்.



➤ உலக சாதனை நிகழ்வாக ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஓரிகாமி காகிதங்களைக் கொண்டு மாணவ, மாணவிகள் உருவாக்கிய 30 மீட்டர் நீள மாதா அமிர்தானந்தமயியின் மிகப்பெரிய உருவப் படம்.

எங்கள் அன்பான அம்மாவுக்கு அர்ப்பணிப்பு, கலை & கைவினை, கல்விச் சிறப்பு, நடனம், விளையாட்டு, சுற்றுச்சூழல் & நிலைத்தன்மை, நினைவாற்றல் & மனத் திறன், இலக்கியம் & மொழி, ஆன்மிகம் & கலாச்சார வெளிப்பாடுகள் போன்ற தலைப்புகளில் உலக சாதனை பதிவுகள் நிகழ்த்தப்பட்டன. நிகழ்வுக்கு அமிர்தபுரி, மாதா அமிர்தானந்தமயி மடம் பொதுச் செயலாளர் சம்பூஜ்ய சுவாமி பூர்ணாமிரிதானந்த்புரி தலைமை தாங்கினார்.

மாதா அமிர்தானந்தமயி மடம் மற்றும் அமிர்தா வித்யாலயம் நிர்வாகிகள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

தமிழ்நாடு அரசு
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை-28. தொலைபேசி எண்: 044-29864447

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு
(ந.க.எண்.9999/2025/மா.தி2, நாள்: 16.04.2025)

1. மூலதன மானிய நிதி இயக்கம் மற்றும் பராமரித்தல் நிதி (O&M DGF) 2025-26ன் கீழ் தமிழகத்தில் உள்ள 1 மாநகராட்சி மற்றும் 3 நகராட்சிகளில் மொத்தம் 5 எண்ணிக்கையிலான உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இணையதளம் மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.
2. குறைந்த பட்சமாக ஒரு பணியின் மதிப்பு ரூ.17.00 இலட்சம் மற்றும் அதிகபட்சமாக பணியின் மதிப்பு ரூ.182.00 இலட்சம் ஆகும்.
3. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான விபரங்களை www.tntenders.gov.in இணையதள முகவரியில் பார்வையிடலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை www.tntenders.gov.in இணைய தள முகவரியில் 23.04.2025 முதல் 07.05.2025 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. ஒப்பந்ததாரர்கள் முன் கலந்தாய்வு கூட்டம் 30.04.2025 அன்று காலை 11.00 மணியளவில் சம்மந்தப்பட்ட மாநகராட்சிகள் / நகராட்சிகளில் நடைபெறும்.
6. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 07.05.2025 அன்று மாலை 03:00 மணிவரையில்.
7. சம்மந்தப்பட்ட மாநகராட்சிகள் / நகராட்சிகளில் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: 07.05.2025 அன்று மாலை 3.30 மணி.
8. ஒவ்வொரு பணியின் மதிப்பீட்டு தொகை மற்றும் டேவணித் தொகை, ஒப்பந்ததாரருக்கான தகுதி உள்ளிட்ட விபரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் மூலம் அறியவும்.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28
செ.ம.தொ.இ./1568/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.11/ 2025-2026/ முவதொஅ / நாள்: 14.04.2025

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும் **கண்காணிப்புப் பொறியாளர் (நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், செங்கல்பட்டு வட்டம்,** அவர்களால் **ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்துதல் SASCI - 2025-2026** பணிகளின் கீழ் **செங்கல்பட்டு (நெ)** நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான ஒரு பணிக்கு இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **05.05.2025, 15.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் **19.04.2025** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ)
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு-1.
செ.ம.தொ.இ./1532/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.08/ 2025-2026/ முவதொஅ / நாள்.10.04.2025

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும் **கண்காணிப்புப் பொறியாளர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், செங்கல்பட்டு வட்டம், அவர்களால் ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்துதல் SASCI – 2025-2026** பணிகளின் கீழ் **செங்கல்பட்டு(நெ)** நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான ஒரு பணிக்கு இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **05.05.2025, 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **19.04.2025** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர்(நெ)
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு-1
செ.ம.தொ.இ./ 1533 /ஒப்பந்தப்புள்ளி/2025

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் (ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. கிளை அலுவலகம் : எண்.28/36, 1வது தளம், தெற்கு மேற்கு போக் சாலை, தி.நகர், சென்னை - 600017.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **ஆன்லைன் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	15.04.2025-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நாள் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	46009420000970	1) திரு. பார்த்திபன் ஆறுமுகம் 2) திருமதி. சுகுணா	24-06-2025	25-03-2025	ரூ.22,21,572.66 (ரூபாய் இருபத்தி இரண்டு இலட்சத்து இருபத்தி ஒராயிரத்து ஐநூற்றி எழுபத்தி இரண்டு மற்றும் பைசா அறுபத்தி ஆறு மட்டும்)	02.05.2025 நேரம்: காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை	ரூ.24,19,000/- (ரூபாய் இருபத்தி நான்கு இலட்சத்து பத்தொன்பதாயிரம் மட்டும்)	ரூ.2,41,900/- (ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பத்தி ஒராயிரத்து தொள்ளாயிரம் மட்டும்)	17.05.2025 காலை 11.00 மணி முதல் மாலை 02.00 மணிவரை	16.05.2025, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.28/36, தெற்கு மேற்கு போக் சாலை, தி.நகர், சென்னை - 600017.

அட்டவணை சொத்து : சொத்து மற்றும் அதனை சார்ந்த பகுதிகளும், கடலூர் பதிவு மாவட்டம், கடலூர் இணை 2 SRO, வெள்ளக்கரை கிராமம், சர்வே எண். 114/5, வருவாய் பதிவின்படி 114/5, மொத்த பரப்பு 1962 + 1312 இதில் UDS 1/2 பங்கு 656=2618 சதுர அடி, வெள்ளக்கரை கிராமம், கடலூர் பதிவு மாவட்டம், கடலூர் இணை 2 SRO. **1) 1952 சதுர அடி நிலத்தின் எல்லைகள்: வடக்கே :** சகுந்தலா மனை, **தெற்கே :** 2வது அயிட்டம் மனை, **கிழக்கே :** சிவகுமார் மனை, **மேற்கே :** கொலாஞ்சி மனை. **2) 656 சதுர அடி நிலத்தின் எல்லைகள்: வடக்கே :** சிவகுமார் மனை, **தெற்கே :** கோவில் நிலம், செந்தில், சண்முகம் நிலம், **கிழக்கே :** சாலை, **மேற்கே :** கொளஞ்சி மனை. அளவு விவரங்கள் : வடக்கு-கிழக்கு மேற்கு : 164 அடி, தெற்கு-கிழக்கு மேற்கு : 164 அடி, கிழக்கு-தெற்கு வடக்கு- 8 அடி, மேற்கு-தெற்கு வடக்கு- 8 அடி, 1312 சதுர அடி மற்றும் அனைத்து அடிப்படை உரிமைகள் மற்றும் பாதை இதில் 1962 + 1312 இதில் UDS 1/2 பங்கு 656=2618. இயற்கை மற்றும் சொத்தின் உபயோக அனுமதி: A) ஃப்ரீ ஹோல்ட், B) குடியிருப்பு. சொத்தின் உபயோகம் குடியிருப்பு.

மின் ஏலமானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு" & "உள்ளது உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **"ஆன்லைனில்"** நடத்தப்படும். மேலே கூறப்பட்ட சொத்தை வாங்குவது தொடர்பான அனைத்து தொகைகளும் **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** பெயரில் வழங்க வேண்டும். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் நிறுவனத்தின் மூலம் இணையதள ஏற்பாட்டின் **M/s. 4 Closure** இணையதளம் https://bankauctions.in & www.foreclosureindia.com மூலம் ஏலம் நடத்தப்படும். மேலும் விபரங்களுக்கு, விதிகள் மற்றும் ஆன்லைன் மின்-ஏல பயிற்சி, விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின் ஏல டெண்டர் ஆவணம் ஆகிய தொடர்புக்கு **M/s. 4 Closure, தொடர்பு திரு.M.தினேஷ், தொடர்பு எண். 8142000735. Email id: info@bankauctions.in / dinesh@bankauctions.in.** மேலும் நிபந்தனை மற்றும் விதிகள் விபரங்களுக்கு, ஏல விபரங்கள் மற்றும் மற்ற சொத்தின் விளக்கங்களுக்கு **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் அதிகாரிகள் திரு. சலில் P, (மொபைல் எண். 9884474084),** email: salil.p@janabank.com, **திரு. துரை முருகன் (மொபைல் எண். 9841638849),** email: durai.murugan@janabank.com, **திரு. ரஞ்சன் நாயக் (மொபைல் எண். 6362951653)** email: ranjan.naik@janabank.com தொடர்பு கொள்ளவும். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்குத் தெரிந்த வரைய